இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 09.12.2025

# விமானங்களை இயக்க வைக்காதது யார் தவறு?

இண்டிகோ விமானங்கள் ஆறாவது நாளாக ரத்து செய்யப்பட்டு வரும் நிலையில், அந்நிறுவன தலைமை நிர்வாக அதிகாரி பீட்டர் எல்பெர்ஸுக்கு ஒன்றிய அரசு விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பியுள்ளது. ஆறு நாட்களாக ஒன்றிய அரசு என்ன செய்து கொண்டு இருந்தது? வேடிக்கை மட்டும் பார்த்துக் கொண்டு இருந்தார்கள்!

இந்தியாவின் அனைத்து விமான நிலையங்களிலும் பயணிகள் தொல்லைகளுக்கு உள்ளாகி துன்பத்தால் துவண்டு கொண்டிருக்க ஒருவார காலம் வேடிக்கை பார்த்துள்ளது ஒன்றிய அரசு.

ஒவ்வொரு நாளும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட விமானங்களை ரத்து செய்துள்ளது இண்டிகோ. சென்னை, மும்பை, டெல்லி, கொல்கத்தா, அகமதாபாத், பெங்களூரு உள்ளிட்ட விமான நிலையங்களில் பயணிகள் நீண்ட வரிசையில் நிற்கிறார்கள். படுத்துக் கிடக்கிறார்கள்.

“விமானங்களை இயக்குவதற்கும், விமானிகளுக்கான ஓய்வு நேரத்தை அதிகரிப்பதற்கும் ஜூலை 1, நவம்பர் 1 ஆகிய தேதிகளில் நடைமுறைக்கு வந்த புதிய அரசாங்க விதிகளுக்குப் பிறகு, விமான நிறுவனம் விமானிகள் பற்றாக்குறையால் திணறி வருகிறது. இது விமானப் பணியாளர்களை நிர்வகிப்பதை சிக்கலாக்கியுள்ளது,” என்று இண்டிகோ வட்டாரங்கள் சொல்கின்றன.

**நவம்பரில் மொத்தமாக இண்டிகோ 1,232 விமானங்கள் ரத்து செய்யப்பட்டன. நவம்பர் மாதக் கடைசியில் இந்த நிலைமை அதிக மோசம் ஆனது. டிசம்பர் கடைசியில் இன்னும் மோசமானது. “சிறிய தொழில்நுட்பக் கோளாறுகள், குளிர்காலம் தொடர்பான கால அட்டவணை மாற்றங்கள், மோசமான வானிலை, விமானப் போக்குவரத்து அமைப்பில் அதிகரித்து வரும் நெரிசல் மற்றும் புதிய பணியாளர் வரிசை விதிகள் (விமான கடமை நேர வரம்பு) போன்ற பல எதிர்பாராத செயல்பாட்டு சவால்களை எதிர்கொண்டுள்ளோம்.” என்று அந்த நிறுவனம் சொல்கிறது. உண்மையான காரணம் என்பது இவை அல்ல.**

**ஏர் இந்தியா விமானம் விழுந்து நொறுங்கிய பிறகு விமானப் போக்குவரத்து பாதுகாப்பை உறுதிப்படுத்தும் விதமாக விதிகளை ஒன்றிய அரசு கடந்த நவம்பர் 1 முதல் நடைமுறைக்கு கொண்டு வந்தது. இதனை இண்டிகோ நிறுவனம் ஏற்க மறுக்கும் வகையில் புதுவிதமாகக் கையாண்டது. எந்தவித முன்னறிவிப்பும் இல்லாமல் திடீர் திடீரென விமானங்களைக் கொத்துக் கொத்தாக ரத்து செய்தார்கள். இது ஒருவிதமான மிரட்டல்தான். அதுவும் வெளிப்படையான மிரட்டலாகவே அமைந்து இருந்தது.**

விமானச் சீட்டு வாங்கியவர்கள் அனைவரும் பந்தாடப்பட்டார்கள். குறிப்பிட்ட இடத்துக்கு குறிப்பிட்ட நேரத்தில் போக முடியாத நெருக்கடி ஒரு பக்கம் என்றால், இன்னொரு பக்கத்தில் மற்ற நிறுவனங்கள் கொள்ளை விலையை வைத்து பயணச் சீட்டுகளை விற்கத் தொடங்கினார்கள்.

விமானிகள் எத்தனை மணிநேரம் வேலை செய்யலாம், எவ்வளவு ஓய்வெடுக்க வேண்டும் என்பது குறித்த புதிய விதிகள், விமானிகளின் சோர்வைக் குறைப்பதற்காக உருவாக்கப்பட்டன. ஆனால், விமான நிறுவனம் அவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. ஆரம்பத்தில் ஒன்றிய அரசின் சட்டத்தின் மீது பழி போடாமல், வானிலையை காரணமாகக் காட்டியது இண்டிகோ. தற்போது, மன்னிப்பு கேட்டு திறந்த மடலை வெளியிட்டுள்ளது.

விமானி அமைப்புகள் இண்டிகோ நிறுவனத்தையே குற்றம்சாட்டியுள்ளது. ஒன்றிய அரசின் சட்டம் பற்றி ஏற்கனவே நன்கு அறிந்த இண்டிகோ நிறுவனம், உரிய கால அவகாசம் கிடைத்த நிலையிலும், விமானிகளின் எண்ணிக்கையை அதிகரிக்காமல் இருந்ததே இதற்கு காரணம் என அவர்கள் கூறியுள்ளனர். இந்தச் சட்டத்தை ரத்து செய்ய வைப்பதற்காகவே, இந்த திட்டமிட்ட நாடகத்தை இண்டிகோ நடத்தியுள்ளதாகவும் குற்றம்சாட்டப்படுகிறது.

தற்போது, வாரத்திற்கு 48 மணி நேர ஓய்வு என்ற சட்டத்தை ஒன்றிய அரசு திரும்பப் பெற்றுள்ளது. இதன் காரணமாக பயணிகளின் பாதுகாப்பு கேள்விக் குறி ஆகி உள்ளதாக விமானிகள் அமைப்பு குற்றம்சாட்டியுள்ளது.

விமானிகளின் உடல்நிலை, பயணிகளின் பாதுகாப்பை கவனத்தில் கொண்டு தான் வாரத்திற்கு 48 மணி நேர கட்டாய ஓய்வு விதி அமல்படுத்தப்பட்டது, ஆனால் இண்டிகோ கொடுத்த நெருக்கடியை சரி செய்ய உடனடியாக இந்த விதி திரும்பப் பெறப்பட்டு உள்ளது.

**இப்பிரச்சினையை தொடக்கத்திலேயே கவனித்து கையாண்டிருக்க வேண்டும் ஒன்றிய அரசு. 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விமானங்களை வைத்துள்ளது இண்டிகோ. எனவே ஒட்டுமொத்தமாக விமானப் பயணமே சிக்கலுக்கு உள்ளாகி இருக்கிறது.**

**இண்டிகோ நிறுவனத்துடன் ஒன்றிய அரசு பேச்சுவார்த்தை நடத்தி இருக்க வேண்டும். விமானங்களை ரத்து செய்யக் கூடாது என்று உறுதியாகச் சொல்லி இருக்க வேண்டும். அந்த நிறுவனத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருக்க வேண்டும். அது எதையும் செய்யவில்லை ஒன்றிய அரசு. ‘இண்டிகோ’வைக் கட்டுப்படுத்தாதது யாருடைய தவறு? இப்போது விதிமுறைகளை திரும்பப் பெற்றது அதனை விட மோசமான நடவடிக்கை ஆகும்.**

ஏர் இந்தியாவை தனியாரிடம் விற்று விட்டு ஒன்றிய அரசு விமான சேவையில் இருந்து கை கழுவியதன் விளைவுதான் நாட்டின் அனைத்து விமான நிலையங்களும் அலறுகிறது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (8.12.2025) தலைமைச் செயலகத்தில், இந்தியாவிற்கான டென்மார்க் தூதர் ராஸ்மஸ் அபில்கார்ட் கிறிஸ்டென்சென் (Mr. Rasmus Abilgaard Kristensen) அவர்கள் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பின்போது, அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுத்துறைச் செயலாளர் திருமதி ரீட்டா ஹரிஷ் தக்கர், டென்மார்க் கௌரவத் தூதர் விஜய் சங்கர், கௌரவத் துணை தூதர் எஸ்.பி. பிரபாகர் ராவ், சன்மார் (SANMAR) நிறுவனத்தின் தலைவர் கார்த்திக் ராஜசேகர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (8.12.2025) முகாம் அலுவலகத்தில், கழக இளைஞர் அணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சந்தித்து, திருவண்ணாமலையில் 14.12.2025 அன்று நடைபெறவுள்ள தி.மு.க. இளைஞர் அணி வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சிக்கான அழைப்பிதழை வழங்கினார். உடன் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன் ஆகியோர் உள்ளனர்.

### திருவண்ணாமலையில் தி.மு.க. இளைஞர் அணி வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு!

# வரவேற்பு மற்றும் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு குழுவினர் பட்டியல்!

## பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அறிவிப்பு!

திருவண்ணாமலை, டிச.9 -

திருவண்ணாமலையில் வடக்கு மண்டலத்திற்குட்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகளுடன் சந்திப்பு நிகழ்ச்சி, துணை முதலமைச்சரும், கழக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெற உள்ளது.

இந்த நிகழ்வில் முதலமைச்சரும், கழகத் தலைவருமான தளபதி அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ள இருக்கிறார்கள். இளைஞர் அணி சந்திப்பு நிகழ்வு சிறப்பாக நடைபெற வரவேற்பு மற்றும் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு குழுவினர் பட்டியலை பொதுப்பணித் துறை அமைச்சரும், வடக்கு மண்டல தேர்தல் பணி பொறுப்பாளருமான எ.வ. வேலு அறிவித்துள்ளார்கள்.

இதுகுறித்து, பொதுப்பணித்துறை அமைச்சரும், வடக்கு மண்டல தேர்தல் பணி பொறுப்பாளருமான எ.வ.வேலு விடுத்துள்ள அறிக்கையில்,

வருகின்ற 14.12.2025 அன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00மணியளவில், திருவண்ணாமலை, மலப்பாம்பாடி பகுதியில் உள்ள கலைஞர் திடலில், வடக்கு மண்டல திமுக இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு நடைபெறவுள்ளது.

சந்திப்பு நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற கீழ்க்கண்ட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளது.

**வரவேற்பு மற்றும் நிகழ்ச்சி ஒருங்கிணைப்புக் குழு**

1. கு.பிச்சாண்டி, தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத் தலைவர்.

2. எம்.எஸ்.தரணி வேந்தன், எம்.பி., தி.மலை, வடக்கு மாவட்ட கழக செயலாளர்,

3. டாக்டர் எ.வ.வே. கம்பன், மாநில மருத்துவ அணி துணைத் தலைவர்

4.சி.என்.அண்ணாதுரை, எம்.பி., மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்,

5. இரா.ஸ்ரீதரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்,

6.மு.பெ.கிரி, எம்.எல்.ஏ., மாவட்ட துணைச் செயலாளர்,

7. பெ.சு.தி.சரவணன், எம்.எல்.ஏ., தலைமைச் செயற்குழு உறுப்பினர்,

8. மு.அம்பேத்குமார், எம்.எல்.ஏ.,

9. ஓ.ஜோதி, எம்.எல்.ஏ.,

10. எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட பொருளாளர்,

11. பிரியா ப.விஜயரங்கன், மாவட்ட துணைச் செயலாளர்,



12. ப.கார்த்திவேல்மாறன், மாநகர செயலாளர்,

13. ந.நரேஷ்குமார், வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்,

**விருந்தோம்பல் குழு**

1.இரா.ராஜேந்திரன், சுற்றுலாத்துறை அமைச்சர், 2. வசந்தம் கார்த்திகேயன், எம்.எல்.ஏ.,

3.க.தேவராஜ், எம்.எல்.ஏ., 4.எஸ். அம்பேத்குமார், எம்.எல்.ஏ., 5.ஓ.ஜோதி, எம்.எல்.ஏ., 6.நல்லதம்பி, எம்.எல்.ஏ., 7.வில்வநாதன், எம்.எல்.ஏ., 8.பிரியா ப.விஜயரங்கன், மா.து.செ., 9. கோ.ரமேஷ்.ஒ.செ., 10.அப்சல் - ஆரணி

**மேடை மற்றும் அரங்கம் குழு**

1.சி.என்.அண்ணாதுரை. எம்.பி., 2.விஜி(எ)விஜயராஜ், ப.பொ., 3.சு.ராஜாங்கம், மா.இ.து.அ., 4.சீ.கண்ணதாசன், மா.இ.து.அ., 5. கோ. ராஜசேகர், மா.இ.து.அ., 6. எம்.ரமேஷ், மா.இ.து.அ., 7. டி. திலீப் குமார், மா.இ.து.அ., 8.எஸ்.சதீஷ்குமார், மா.இ.து.அ.,

**வரவேற்பு குழு**

1.ப.கார்த்திவேல்மாறன், மாநகர செயலாளர், 2.மு.பன்னீர்செல்வம். ஒ.செ., 3.மெய்யூர் சந்திரன். ஒ.செ., 4.பெ.கோவிந்தன். ஒ.செ., 5.த.ரமணன்.ஒ.செ., 6.சி.சண்முகம்.ப.பொ., 7. குட்டி க.புகழேந்தி. ப.பொ., 8.வழக்கறிஞர் ந.சீனுவாசன். ப.பொ., 9.மு.அன்பழகன். ந.செ., 10.அ.ஏழுமலை. ஒ.செ., 11.த.செந்தில்குமார். ஒ.செ., 12.த.மனோகரன். ஒ.செ.,

**போக்குவரத்துக் குழு**

1.மு.பெ.கிரி, எம்.எல்.ஏ., 2.சௌந்தரராசன், மாநில தொ.மு.ச., 3.அ. கோவிந்தன், ப.பொ., 4. பா. ஷெரீப், ப.பொ., 5.நா.சரவணன். தொ.மு.ச.,

**விளம்பரக் குழு**

1.பெ.சு.தி.சரவணன், எம்.எல்.ஏ., 2.உதய் கு. கணேஷ், 3.ஏ.ஏ.ஆறுமுகம், 4.ச.விமல்குமார்

**அழைப்பிதழ் மற்றும் விருந்தினர் உபசரிப்பு**

1.வழக்கறிஞர் கே.வி. மனோகரன், 2.வழக்கறிஞர் மு.புகழேந்தி, 3.வழக்கறிஞர் சூ.பழனி, 4.வழக்கறிஞர் இரா.கார்த்திகேயன், மா.வ.அ.அ., 5.வழக்கறிஞர் டி.எம்.கதிரவன்,.

**மருத்துவக் குழு**

1.சேஷாத்திரி, 2.டாக்டர் பிரவீன் ஸ்ரீதரன், 3.டாக்டர் மகேந்திரன்,

4.டாக்டர் சவீதா கதிரவன்

இதில் சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை கிழக்கு, சென்னை மேற்கு, சென்னை தென் மேற்கு, சென்னை தெற்கு, திருவள்ளுவர் கிழக்கு, திருவள்ளுவர் மத்தியம், திருவள்ளுவர் மேற்கு, காஞ்சிபுரம் வடக்கு, காஞ்சிபுரம் தெற்கு, இராணிப்பேட்டை, வேலூர் வடக்கு, வேலூர் தெற்கு, திருப்பத்தூர், கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு, தர்மபுரி கிழக்கு, தர்மபுரி மேற்கு, சேலம் மத்தியம், சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் தெற்கு, விழுப்புரம் மத்தியம், கள்ளக்குறிச்சி வடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு, திருவண்ணாமலை வடக்கு, திருவண்ணாமலை தெற்கு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர் அணி நிர்வாகிகள் கலந்து கொள்ள உள்ளார்கள்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### பிரதம மந்திரி சூரிய மின் சக்தி திட்டத்தின் கீழ்,

# தமிழ்நாட்டிற்குத் தேவையான மின் உற்பத்தியைப் பெற ஆவன செய்யப்படுமா?

## மக்களவையில் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, டிச. 9 -

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் 03 டிசம்பர் 2025 அன்று மக்களவையில், பிரதம மந்திரி சூரிய மின் சக்தி திட்டத்தின் பதிவு செய்யப்படும்விண்ணப்பங்களுக்கும் அனுமதி தரப்படும் திட்டங்களுக்கும் அதிக வித்தியாசம் இருப்பது ஏன்? என்றும்,

சூரிய மின்சக்தி உற்பத்தியை தமிழ் நாட்டில் பெருக்க ஒன்றிய அரசின் முன்முயற்சிகள் என்னென்ன? என்றும் கூரை மேல் பொருத்தப்படும் சூரிய மின் சக்தி திட்டங்களை தமிழ்நாட்டில் அதிகரிக்க இயலுமா? என்றும், ஒன்றிய அரசின் புதுப்பிக்க தக்க எரிசக்தி துறை இணையமைச்சர் சிரிபத் யஸ்ஸோ நாயக் அவர்களிடம் விரிவான கேள்வி எழுப்பினார்.



ஒன்றிய அரசின் புதுப்பிக்கதக்க எரிசக்தி துறை இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில் வருமாறு:

பிரதம மந்திரி சூரிய மின் சக்தி திட்டத்தில் பயனாளர்களுக்கு உதவி செய்யும் வகையில் வழி முறைகள் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றும், நேரடியாக தேசிய கணினித் தளத்தில் விண்ணப்பங்களை இணையத்தாலே போதுமானது என்றும், கடந்த நவம்பர் 2025 வரை தமிழ் நாட்டின் மொத்த உள்ள 28 மாவட்டங்களிலும் கிடைக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 60386 ஆக உள்ளது என்றும், இவற்றில் சூரிய மின் சக்தியில் பயன் பெறும் குடும்பங்கள் 55255 ஆக உள்ளது என்றும், அரக்கோணம் நாடாளு மன்றத் தொகுதி அமைந்துள்ள ராணிப்பேட்டை மாவட்டத்தில் இணைக்கப்பட்ட 555 விண்ணப்பங்கள் 399 குடும்பங்கள் பயனாளிகளாக உள்ளனர் என்றும், ஒன்றிய அரசின் புதுப்பிக்க தக்க எரிசக்தி துறை இணையமைச்சர் சிரிபத் யஸ்ஸோ நாயக் அவர்கள் பதில் அளித்துள்ளார்.